# மூன்றாம் பருவ தொகுத்தறி தேர்வு – 2024

**7 - ஆம் வகுப்பு** **சமூக அறிவியல்**

காலம் : 2.00 மணி மதிப்பெண்கள் : 60

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 X 1 = 5

1. அத்வைதம் எனும் தத்துவத்தை போதித்தவர் யார்?
   அ) இராமானுஜர் ஆ) இராமாநந்தர் இ) நம்மாழ்வார் ஈ) ஆதி சங்கரர்
2. முற்காலச் சோழர் கட்டடக்கலையின் சிறப்பம்சம் யாது?
   அ) புடைப்புச் சிற்பங்கள் ஆ) விமானங்கள் இ) பிரகாரங்கள் ஈ) கோபுரங்கள்
3. .................. உலகின் சர்க்கரைக் கிண்ணம் என அழைக்கப்படுகிறது.
   அ) மெக்ஸிகோ ஆ) அமெரிக்கா இ) கனடா ஈ) கியூபா
4. இந்தியாவில் சாலைப் பாதுகாப்பு வாரம் முதன் முதலாகக் கொண்டாடப்பட்ட வருடம்
   அ) 1947 ஆ) 1990 இ) 1989 ஈ) 2019
5. வருமான வரி என்பது .......... .
   அ) நேர்முக வரி ஆ) மறைமுகவரி இ) அ மற்றும் ஆ ஈ) இவற்றில் எதுவுமில்லை

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 x 1 = 5

6. புத்த சரிதத்தை எழுதியவர் ................ ஆவார்.
7. புவியியலாளர்களின் ஒரு முக்கிய கருவியாக .......... அமைகிறது.
8. மிகப்பெரிய அழிவு ஏற்படுத்தும் அலைகளை ஏற்படுத்தும் நீரின் இடபெயர்வு ...... எனப்படும்.
9. புக்கர் பரிசை வென்ற முதல் இந்திய பெண் .................... .
10. .................. நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை சரிபார்க்க நுகர்வோர் பாதுகாப்பு துறையின் மகாசாசனம் என்று கருதப்படுகிறது.

**III பொருத்துக.** 5 x 1 = 5

| | | | |
|---|---|---|---|
| 11. | கிரந்த வளி | - | பூமத்திய ரேகை பகுதி |
| 12. | நேமிநாதர் | - | சரக்கு மற்றும் சேவை வரி |
| 13. | நான்கு மணி கடிகார மழை | - | 22 வது தீர்த்தங்கரர் |
| 14. | தொழிற்சாலை விபத்து | - | கபீர் |
| 15. | 01.07.2017 | - | கவனமின்மை |

K. Sivananda, M.A.,B.Ed.,
P.G. Asst ( Social Science)
Govt High School,
Sandanapalli, Kelamangalam (Block)
Krishnagiri (Dt)
PH:9003373508

**IV பின்வரும் வினாக்களுக்கு விடையளி.** 5x1=5

16. **கூற்று (A) :** வட அமெரிக்காவின் தெற்கு மற்றும் மேற்கு மாநிலங்களில் பருத்தி நன்றாக வளருகிறது. **காரணம் (R) :** மழையுடன் கூடிய வெப்பமான கோடைகாலம் மற்றும் வளமான மண் ஆகியவை பருத்தி விளைவதற்கான ஏற்ற சூழல்களாக உள்ளன.
   அ) கூற்றும் காரணமும் சரி ஆ) கூற்று சரி காரணம் தவறு
   இ) காரணம் தவறு கூற்று சரி ஈ) காரணம் மற்றும் கூற்று தவறு



www.Padasalai.Net

17. **சரியா? தவறா?**
குருநானக், சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார்.
18. நாளந்த, தட்சசீலம், விக்கிரமசீலா ஆகியன மிகச்சிறந்த புனிதத் தலங்களாயின.
19. **பொருந்தாததைக் காண்.**
திருப்பருத்திக் குன்றம், கீழக்குயில்குடி, கழுகு மலை, நரகப்பட்டினம், சித்தன்ன வாசல்.
20. **சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.**
பின்வரும் வரியில் எது நேர்முக வரி?
அ) சேவை வரி ஆ) செல்வ வரி இ) விற்பனை வரி ஈ) வளர் விகித வரி

**V எவையேனும் 8 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்க.** 8 x 2 = 16
21. நாயன்மார்கள் மொத்தம் எத்தனை பேர்? அவர்களில் முக்கியமானோர் யாவர்?
22. திரிபீடகாவின் மூன்று பிரிவுகளை விளக்குக.
23. தென் அமெரிக்காவின் இயற்கை பிரிவுகளை எழுதுக.
24. வேறுபடுத்துக : ராக்கி மலைகள் மற்றும் அப்லேஷியன் மலைகள்.
25. நிலவரைட நூலின் வகைகளைக் குறிப்பிடுக.
26. பேரிடர் மேலாண்மை சுழற்சியின் ஆறு நிலைகள் யாவை?
27. சமூகத்தில் பெண்கள் வகிக்கும் பல்வேறு பாத்திரங்களை பற்றி விவாதககவும.
28. பாதுகாப்பாக வாகனத்தை இயக்குவதற்கு இரண்டு பாதுகாப்பு முறைகளைக் கூறு.
29. சந்தை என்றால் என்ன?
30. வரியின் வகைகள் யாவை? மற்றும் அதனைப் பற்றி விளக்குக.

**VI பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.** 3 x 5 = 15
31. இந்திய சமூகத்தில் பக்தி இயக்கம் எவ்விதத் தாக்கத்தை ஏற்படுத்தியது? ***(அல்லது)***
பல்லவர் காலத்தில் கோவில் கட்டடக் கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது விளக்குக.
32. நில வரைபடம் மற்றும் புவி மாதிரிகளை வேறுபடுத்தி எழுதுக. ***(அல்லது)***
புவி அதிர்ச்சி, அதன் பாதிப்புகள் மற்றும் மட்டுப் படுத்துதல் படி நிலைகள் பற்றி எழுதுக.
33. ஓர் இந்திய வாகனம் ஓட்டுவதற்குத் தேவையான ஆவணங்கள் எவை? ***(அல்லது)***
வரியின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்குக.

**VII அ) பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்க.** 4 x 1 = 4
34. 1) தஞ்சாவூர் 2) மதுரை 3) டெல்லி 4) இந்தியப் பெருங்கடல்
**ஆ) உலக வரைபடத்தில் குறிக்க.** 5 x 1 = 5
1) அட்லாண்டிக் பெருங்கடல் 2) ஐக்கிய அமெரிக்க குடியரசு (U.S.A)
3) கனடா 4) ஹட்சன் விரிகுடா 5) பிரேசில்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com